★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 3உ செவ்வாய் (18—9—56) ★ ☆ வெளியூர்: புரட்டாசி 4உ புதன் (19—9—56) [இதழ் 85

கிணறு தோண்ட ரூ. 1,68,000!

ஆளத்தெரிந்தோரின் அவலட்சணம்

மத்திய பாரத் அரசாங்கத்தின் வரவு-செலவு கணக்கு பரிசீலனையின்போது ஓர் ருசிகர சம்பவம் வெளிவந்துள்ளது.

கிணறு ஒன்று தோண்டுவதற்கு ரூ. 1,68,000 செலவு செய்யப்பட்டிருப்பதாகவும், அந்தக் கிணறு தோண்டுவதற்கான இடத்தை ஓர்பிரபலமான 'அக்கல்டிஸ்ட்' (மறைவான சக்திபெற்றவர்) தேர்ந்தெடுத்தார் என்றும் தெரியவருகிறது.

சிதம்பரனார் கோரிய சுதந்திர வாழ்வு

தென்னாட்டு மக்களுக்கு கிடைத்ததா?

'ஒன்பதாண்டு 'சுயராஜ்யம்' மக்கள் வாழ்வில் செய்த மாற்றம்தான் என்ன?'

தோழர் கே. ஏ. மதியழகன் முழக்கம்

15—9—56-ல், சென்னை-சேத்துப்பட்டு வ. உ. சி. இளைஞர் கழக ஆண்டு விழாவில் தோழர் கே. ஏ. மதியழகன் ஆற்றிய உரையின் சாரம் இங்கு தரப்படுகிறது :—

"வ. உ. சி.-யின் பெயரால் அமைந்துள்ள இந்தக் கழகத்தவர், கடந்த எட்டாண்டுகளாக இந்த வட்டார மக்களுக்கு மிகவும் அடக்கமான வகையில் சிறப்பான பணியாற்றியிருக்கிறார்கள்; இன்று எட்டாம் ஆண்டு விழாக் கொண்டாடுகிறார்கள்.

"கழகத்தவர் நடத்திவருகிற இலவச வாசகசாலையைப் பற்றியும், இரவுப் பள்ளியைப் பற்றியும் தலைவர்கள் எடுத்துரைத்தார்கள். கப்பலோட்டிய வீரத் தமிழனது பெயரால் இந்த வட்டாரத்தில் உள்ள வாலிபர்கள் இதுபோன்ற சிறப்பான பணிகளில் ஈடுபட்டிருப்பது காண நாங்கள் மகிழ்கிறோம்; பெருமைப்படுகிறோம்; நல்லதோர் சமுதாய வளர்ச்சிக்காகப் பாடுபடுகிற அவர்களது பணி மேலும் சிறந்து ஓங்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

"வ. உ. சிதம்பரனார், 'இந்த நாட்டு மக்களுக்கு நல்லதோர் வாழ்வு வேண்டும்' என்று விரும்பினார்; அந்த வாழ்வு கிடைப்பதற்கு வெள்ளை ஏகாதிபத்தியம் தொலைய வேண்டும் என்று கருதினார்; அதனால் வெள்ளையர்களுக்கு எதிராகப் போராடினார்; அந்த விடுதலைப் போராட்டத்தில் கஷ்ட நஷ்டங்களை ஏற்றுக்கொண்டார்; சிறைப்பட்டார்; செக்கிழுத்தார்; வாழ்வைப் பலி கொடுத்தார். இந்த நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்கவேண்டும் என்பதற்காகவே இத்தனைத் தியாகங்களையும் அவர் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்; ஆனால், 1947-க்குப் பிறகு நிகழ்ந்திருப்பது என்ன?

"'60 ஆண்டுகளாகச் சிறைப்பட்டு, தடியடிபட்டு, தூக்குமேடையேறி வெள்ளையரிடத்திலிருந்து சுதந்திரம் பெற்றுவிட்டோம்' என்று காங்கிரசார் கூறினர்.

"வெள்ளையர் வெளியேறுவதைக் கண்டிருந்தால், வ. உ. சி.-யின் உள்ளம் புளகாங்கிதம் அடைந்திருக்கும்-பூரித்துப் போயிருக்கும்—உண்மைதான்; ஆனால், 'சுதந்திரம்' கிடைத்த பிறகு இந்த நாட்டு மக்களின் நிலையை அவர் கண்டிருந்தால், அவர் கண்ணீர் வடித்திருப்பார்!

"காங்கிரசார் கிடைத்துவிட்டதாகக் கூறிய 'சுயராஜ்யம்,' நாட்டு மக்களின் வாழ்வில் என்ன மாற்றத்தை உண்டுபண்ணிவிட்டது? 'சுயராஜ்ய'த்தால் இந்த நாட்டு மக்கள் கண்ட பலன் என்ன?

"ஏழை எளியவர்களுக்கு வாழ்வு தரப்படவில்லை; இந்த நாட்டுச் செல்வம் இந்த நாட்டவருக்குப் பயன்படவில்லை; வெள்ளையன் காலத்திலிருந்ததைப் போலவே இன்னும் நிலப் பிரபுக்கள், பெரு முதலாளிகள் ஆகியோரின் சுரண்டல் நீடித்துக் கொண்டே இருக்கிறது; ஒன்பதாண்டுக் காலத்தில், வெள்ளையர் கால நிலைகள் சிறிதும் மாற்றப்படவே இல்லை என்பதை நாம் எடுத்துச் சொன்னால், 'இவர்கள் எதிர் முகாமிலிருப்பவர்கள்; எதையும் எதிர்த்துக் கொண்டே இருப்பவர்கள்' என்றுதான் பதில் கிடைக்கிறதே தவிர, எழுப்புகிற நியாயமான கேள்விகளுக்கு விடை கிடைப்பதில்லை!

அரசியல் அந்தஸ்து இன்றேல் தமிழ் மொழி தழைக்குமா?

"வ. உ. சிதம்பரனார், தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்; தாய் மொழி—தமிழ், உரிய சிறப்புகளுடன் இந்த நாட்டவரின் ஆட்சி மொழியாக வேண்டும் என்று கனவு கண்டார்.

"ஆனால், கடந்த ஒன்பதாண்டுக் காலத்தில் தமிழ் மொழியின் நிலை என்னவாயிருந்து வந்திருக்கிறது? தமிழ் மொழிக்கு இன்று என்ன அந்தஸ்து இருக்கிறது?

"ஆங்கிலம் அன்னியன் மொழி; நமது மொழி—சொந்தமொழி—தாய்மொழி அந்த இடத்தைப் பெற வேண்டும் என்று விரும்புகிறோம்; ஆனால் நடைபெறுவது என்ன? ஆங்கிலத்தின் இடத்தில் அமர இருப்பது நமது தாய்மொழி அல்ல; வ. உ. சி. கனவு கண்டத் தமிழ் மொழியல்ல; மாறாக, எங்கேயோ இருக்கிற 'லம்பாடி' மொழியாம் இந்திக்குத்தான் ஆங்கிலத்தின் இடம் என்று ஏற்பாடாகி விட்டது; இந்த நிலை தமிழுக்கு ஏன் ஏற்பட வேண்டும்?

'தமிழ்மொழி சிறந்த மொழியாக இருக்கலாம்; 'இலக்கண இலக்கியச் சிறப்புகளுடையது; இதுபோன்றதொரு இனிமையான மொழி வேறெங்கேனும் உண்டா?' என்று உலகத்தையே நோக்கி நாம் அறைகூவல் தரலாம்; ஆனாலும், ஒரு மொழிக்கு அது எத்தனை சிறப்புடையதானாலும் அரசியல் அந்தஸ்து இல்லையானால், அந்தமொழி நாளடைவில் வீட்டுக்குள் அடங்கிவிடும் மொழியாகிவிடும். ஆனால், ஏதாவது ஒரு காட்டுமிராண்டித்தனமான மொழியானாலும் அது அரசியல் அந்தஸ்தைப் பெற்றால், ஓரிரு தலைமுறைகளில் அது மிகச் சிறப்பானதோர் மொழியாகிவிட முடியும்.

"தமிழ் மொழிக்கு—அது எத்தனை இலக்கியச் சிறப்புடையது என்றாலும்—அரசியல் அந்தஸ்து தரப்படாவிட்டால் அது நாளடைவில் சிறப்பிழந்துபோகும். வ. உ. சி. தமிழுக்காகப் பாடுபட்டார் என்றால், அவர் போன்றோரது தியாகத்தால் ஆட்சிபீடமேறியிருப்பவர்கள் தமிழ் மொழியைக் காப்பாற்றக் கடமை உடையவர்கள் அல்லவா?

வ. உ. சி. பெயரால் எத்தனை கப்பல்கள் ஓடுகின்றன?

"வ. உ. சி., வெள்ளையருக்கு எதிராகக் கப்பலோட்டியவர் என்று கூறிப் பெருமையடைபவர்கள், இன்று வ. உ. சி. பெயரால் எத்தனை கப்பல்கள் ஓடுகின்றன என்று கூற முடியுமா? வ. உ. சி. அவர்களுக்கு இந்த சுதந்திர புருஷர்கள் ஆட்சியில் தகுந்த மரியாதை காட்டப் பட்டிருப்பதாகவேனும் காங்கிரசாரால் காட்ட முடியுமா?

"வ. உ. சி. பிறந்த நாட்டில்தான் எண்ணற்றத் துறைமுகங்கள் உண்டு. 'சென்னைத் துறைமுகத்தை விரிவுபடுத்துவோம்' என்ற எண்ணம் பெறாத ஆட்சியாளர்கள்—டில்லிப் பெரிய மனிதர்கள், பம்பாயைத்தாண்டி கண்டலா எனும் இடத்தில் புதியதோர் துறைமுகத்தையே நிர்மாணித்திருக்கிறார்கள்—ரூ. 25 கோடி செலவில்—ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ்!

"சென்னையையோ, கொச்சியையோ விரிவுபடுத்த மனம் வரவில்லை. வடநாட்டில் புதியதாகவே ஒரு துறைமுகம் நிர்மாணிக்கப்படுகிறது ரூ. 25 கோடி செலவில்!

"1947-க்கு முன் வடமேற்கு இந்தியாவிலும் இராஜஸ்தானிலும் வாழும் மக்களுக்கு வியாபாரம் நடத்தத் துணை புரிந்தது கராச்சி துறைமுகம்; அந்தக் கராச்சி பாகிஸ்தானியருக்குப் போய்விட்டது என்பதால், அந்த மக்களுக்காக ரூ. 25 கோடி செலவில் புதிய துறைமுகமே எழும்புகிறது! கப்பலோட்டிய தமிழன் என்று பெருமை பேசி என்ன பயன்?

உண்மையை மறுப்பதில்லை; ஆனால் வாயை அடைக்கிறார்கள்

"ஐந்தாண்டுத் திட்டங்கள் என்ற பெயரால், 'சுயராஜ்யம்' வந்துவிட்டதாகக் கூறி வரும் வடநாட்டவர், சுதந்திரத்திற்காகத் தியாகம் பல புரிந்த வ. உ. சி. பிறந்த நாட்டு மக்களுக்கு இழைக்கும் அநீதிகளை நாம் சுட்டிக்காட்டுகிறோம்; வடநாட்டவர்மீது குற்றம் சுமத்துகிறோம்; நியாயமான பதில் கூறுவார்களா?

"'வடநாடு தென்னாட்டின்மீது ஆதிக்கம் புரிகிறது; தென்னாட்டவருக்கு இன்னும் முழு விடுதலை கிடைக்கவில்லை' என்பதை, நாம் ஆயிரம் ஆதாரங்கள் காட்டி எடுத்துரைக்கிறோம். மறுக்க முடியுமா?

"சமீபத்தில் ஒரிசா கவர்னராயிருந்த குமாரசாமி இராசா அவர்கள் குறிப்பிட்டாரே—'வடநாட்டவர் தென்னாட்டின்மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள்; இதை எதிர்த்துப் போரிட வேண்டிய காலம் வரும்' என்று பேசினாரே—வேண்டுமானால் ஓட்டோடிப் போய், 'இப்படியெல்லாம் பேசினால் அதை இவர்கள் பயன்படுத்திக் கொள்வார்களே!' என்று கூறி அவர் வாயை அடைக்க முடிகிறதே தவிர, அவர் கூறிய உண்மையை மறுத்துரைக்க முடியவில்லையே!

"எனவே, வ. உ. சி. கோரிய சுதந்திர வாழ்வு இந்தத் தென்னாட்டு மக்களுக்குக் கிடைத்ததா என்பதை காங்கிரசார் சிந்தித்தாக வேண்டும். அந்த சுதந்திர வாழ்வை மக்களுக்குப் பெற்றுத் தருவதுதானே வ. உ. சி.-க்கு நாம் தரக்கூடிய உண்மையான மரியாதையாக இருக்க முடியும்?"

கொழும்பு துறைமுகத்தில் வேலை நிறுத்தம்!

கொழும்பு துறைமுகத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள், அதிகச் சம்பளம் தரப்பட வேண்டும் என்று கோரி வேலை நிறுத்தம் செய்துள்ளனர். இதன் விளைவாகக் கப்பல்களில் சரக்கு ஏற்றி இறக்கும் வேலை நின்று விட்டது என்று தெரியவருகிறது.

புதுவை நகர சபைத் தலைவர் பதவி நீக்கம்!

புதுவை, செப். 17—

புதுவை மேயர் ஜோசப் லதூர் என்பவரை புதுவை சர்க்கார் 3-மாத காலத்திற்கு 'சஸ்பெண்ட்' செய்துள்ளதாம்.

அவர் தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதாகப் புகார் கிடைத்ததின்பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

சென்னை, செப். 17—

சென்னை விக்டோரியா பொது மண்டபம், (வி. பி. ஹால்) இன்று சென்னை நகரசபை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

காஷ்மீருக்காக!

இந்தியா எவ்விதத்தியாகமும் செய்யுமாம்

ஸ்ரீநகர், செப் 17—

"காஷ்மீரின் பாதுகாப்பு, நல்வாழ்வு, முன்னேற்றம் ஆகியவற்றுக்காக இந்தியா எவ்விதத் தியாகமும் செய்யும்" என்று, இந்திய உள்நாட்டு அமைச்சர் பந்த் ஒரு பொதுக்கூட்டமொன்றில் கூறினாராம்.

ஆப்கானிஸ்தானில் நில நடுக்கம்

ஆப்கானிஸ்தானில் மூன்று நில நடுக்க அதிர்ச்சிகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது; பெஷாவரிலும் வடமேற்கு எல்லை மாகாணத்திலும் நில நடுக்கம் கடுமையாக இருந்ததாகக்கூறப்பட்டுள்ளது.

தோழர்களே! வாக்காளர்களாகி விட்டீர்களா?

நம் நாடு

சென்னை 18-9-56 செவ்வாய்

இருந்துவரும் தொடர்பு!

★

வரவிருக்கும் பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச்சு திங்களுக்குள் முடிவுற்றுவிடும் எனப் பொதுவாகத் தரப்பட்டுள்ள செய்தியைத் தவிர்த்து, வேறு திட்டவட்டமான நாட் குறிப்புகள் இதுவரை தரப்படவில்லை. அத்தகைய அறிவிப்பு எப்பொழுது பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என்பதற்கும் நிச்சயமில்லை.

தேர்தலுக்குரிய நாட் குறிப்பை முடிவாக வெளியிடுவதற்கும், அபேட்சகர்களைப் பொறுக்கும் பணியினைக் காங்கிரஸ் கட்சி இறுதியாக முடிவிற்குக் கொண்டுவரும் காலத்திற்கும் ஏதாவது நெருங்கியத் தொடர்பு இருந்தாலும் இருக்கக்கூடும். அதுவரை தேர்தல் நாட் குறிப்பு குறித்து உண்மை தெரிய முடியாது பொதுமக்கள் திண்டாடத்தான் வேண்டும்.

இந்தத் தேர்தல் துறைக்குத் தேவைப்படும் பயிற்சி அனைத்தையும் நன்கு பயின்றுள்ள கட்சி, காங்கிரஸ் கட்சியே யாகும் என்பது மிகையாகாது. அக்கட்சி கலந்து கொண்ட தேர்தல்களும் பலப்பல.

வெற்றி ஒன்றை மட்டுமே குறியாகக் கொண்டு, அவ்வெற்றியைப் பெற்றுத்தர எவ்வளவு ஒழுங்கற்ற முறைகள் உள்ளனவோ, அவ்வளவு ஒழுங்கற்றமுறைகளையும் கையாண்டு, பலப்பல வெற்றிகளைக் கண்டுள்ள அனுபவம் காங்கிரஸ் கட்சிக்கு நிரம்ப உண்டு. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பணியில், முதல் முதலாகக் கொலை செய்யப்படுவது காந்திய அறவழியேயாகும். சென்றகால நடைமுறையைக் கொண்டு, தேர்தலுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் உள்ள நட்புறவை மேற்குறிப்பிட்ட வகையில் தான் குறிப்பிட்டாக வேண்டும்.

சாதி உணர்வை ஒழித்து தேசிய உணர்வை ஊட்டி வளர்க்க வேண்டும் என விண்ணதிரப் பேசுவதில் காங்கிரஸ் கட்சி முன்னிலையில் இருப்பதாகும். ஆனால் அந்த இலட்சியத்தை முதல் பலியிட்டு சாதி வெறியைத் தூண்டி, தன் கட்சிக்குத் தேர்தலில் வெற்றி தேடுவது என்பதும் காங்கிரஸ் கட்சியின் தனிச் சிறப்பாகும்.

ஏழைகளுக்குப் பரிந்து பேசுவதில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனச் சாதாரண நாட்களில் காங்கிரஸ் கட்சி பீத்திக் கொள்ளுவது வழக்கம்.

ஆனால் தேர்தல் காலத்திலோ, தனது கட்சி சார்பில் நிற்க வைக்கப்படும் அபேட்சகர்கள் ஒவ்வொருவரும் மிகுதியான வருமான வரி கட்டுகிறவர்களா, பெரும் நிலம் படைத்த பிரபுக்களா, தொழில் அதிபர்களா, இலட்சாதிபதிகளா எனப் பலமுறை ஆராய்ந்து பார்த்துத்தான், அத்தகைய தகுதி பெற்றிருப்பவர்களை மட்டுமே கட்சி அபேட்சகர்களாக நியமிக்கும் பழக்கம் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நடைமுறையாகும்.

இவ்வாறு ஒழுங்கீனமாகவும் இலட்சிய முரண்பாடாகவும் கட்சி சார்பில் அபேட்சகர்களைப் பொறுக்கும் வகையில் காங்கிரஸ் கட்சி நடந்து கொண்டுவருவது ஒருபக்கம் இருக்க, தேர்தல் காலத்தில் மேற்கொள்ளும் பொய்ப் பிரசாரத்தையும், எதிர்க் கட்சியினர் குறித்துக்கூறும் அபாண்டங்களையும், தேர்தல் நாளில் வாக்குப் பதிவில் புரியும் பித்தலாட்டங்களையும் கணக்கிட்டுக் கூறுவது என்பது எவராலும் இயலாது. அது, காங்கிரஸ் கட்சியின் தேர்தல் காவியமாக அமைந்துவிடும்.

பிரசார பலம், பண ஆதரவு, தொழிலதிபர் ஒத்துழைப்பு, அரசாங்க அதிகாரம், அதன் விளைவாக இருந்து வருகிற அதிகாரிகளின் அரவணைப்பு ஆகிய இவ்வளவு பலம் பொருந்திய துணைகளைக் கொண்டு செயல்பட்டு வருகிற காங்கிரஸ் கட்சியை, மேற்குறிப்பிட்ட துணைகளில் ஒன்றையேனும் பெற்றில்லாத நமது கழகம், வரவிருக்கும் தேர்தலில் எதிர்த்து நிற்கப் போகிறது என்பதை, ஒரு அரசியல் அற்புதம் என்றுதான் கூறவேண்டும். அது, நூற்றுக்கு நூறு உண்மை என்பதும் மறுக்கமுடியாத உண்மையாகும்.

காங்கிரஸ் கட்சி பெற்றுள்ள மேற்குறித்தத் துணைகள் எதுவுமின்றி, அக்கட்சியைத் தேர்தல் களத்தில் சந்திக்க நமது கழகம் முன்வந்திருப்பது எத்தகைய அரசியல் அற்புதமோ, அதைவிட அதிக அற்புதமானது, வெறுங்கையுடன்—ஆனால் அற உணர்வுடன் தேர்தல் களத்தில் நுழைந்திருக்கும் நமது கழகத்தைக் கண்டு காங்கிரஸ் கட்சி நடுக்குற்று பித்தந்தலைக்கேறி தூற்றித் திரிந்துவருவது.

ஏற்கனவே பெற்றிருந்த பொதுமக்கள் பலத்தை மெள்ள மெள்ளக் காங்கிரஸ் கட்சி இழந்துவருகிறது. சென்ற சில நாட்களாக அந்தச் சரிவு வேகமாகியும் இருக்கிறது.

அதுபோன்றே, காங்கிரஸ் கட்சி இழந்துவரும் பொதுமக்கள் ஆதரவை நமது கழகம் சிறுகச் சிறுக தனது பக்கம் ஈர்த்து வருகிறது.

சில நாட்களாகப் பொதுமக்கள் ஆதரவு கழகத்தின் சார்பில் தீவிரமாகியும் வருகிறது.

காங்கிரஸ் கட்சியினால் ஏமாற்றப்பட்டது கண்டு மனம் உடைந்து காங்கிரஸ் எதிர்ப்புணர்வுடன் மட்டுமே இருந்து வரும் மக்களும் ஏராளமாக உள்ளனர்.

தனக்கும் பொதுமக்களுக்கும் இருந்துவந்தத் தொடர்பு அற்றுப் போனது கண்டு காங்கிரஸ் குழம்பிக் கிடக்கிறது. அத்துடன், நமது கழகத்திற்கு மக்களின் ஆதரவு பெருகி வருவது கண்டும், காங்கிரசுக்குள்ள குழப்பம் பெருந் திகிலாகிவிட்டிருக்கிறது. இதன் பலனைத்தான் நமது கழகம் தேர்தலில் பங்கு கொள்ளப்போவது கேட்டுக் காங்கிரஸ் கட்சிக்குக் குலைநடுக்கம் கண்டிருக்கிறது. நம்மை வாயில் வந்தபடி அக்கட்சி தூற்றி வருவதற்கும் இதுவே தான் காரணம்.

காங்கிரஸ் கட்சிக்கும் நாட்டு மக்களுக்கும் இன்று இருந்து வரும் தொடர்பு இதுதான். இழந்த இத்தொடர்பை இனி காங்கிரஸ் கட்சியால் என்றும் பெறமுடியாது.

வ. உ. சி. இளைஞர் கழக எட்டாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

கே. ஏ. மதியழகன், காஞ்சி-கல்யாணசுந்தரம், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. சொற்பொழிவு

சென்னை, செப். 16—

சென்னை சேத்துப்பட்டு வ. உ. சி இளைஞர் கழக எட்டாம் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் 15-9-56 மாலை 7 மணியளவில் சேத்துப்பட்டு வைத்தியநாதமுதலி தெருவில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் பல தோழர்கள் இயக்கப்பண் பாடினர்.

தோழர் வெ. சுப்பிரமணியம் அவர்கள் வ. உ. சி. இளைஞர் கழகம் கடந்த எட்டாண்டுகளாக இவ்வட்டார மக்களுக்கு ஆற்றிவந்துள்ள அருந் தொண்டினை விளக்கினார்.

அடுத்து தோழர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., காஞ்சி—கல்யாணசுந்தரம் ஆகியோர் வ. உ. சி. கழகத்தின் பணிகளைப் பாராட்டியும், நாட்டு நிலைகளை விளக்கியும் அரிய கருத்துரைகளை வழங்கினர்.

பின்னர், மன்றச் செயலாளர் ஆண்டு அறிக்கை படித்தபின், தலைவர் முடிவுரை யாற்றினார். நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந - கி)

அண்ணா படிப்பகத் திறப்பு விழா

இராயப்பேட்டையில் தோழர்கள் பேச்சு

சென்னை, செப். 17—

நேற்று மாலை சென்னை புதுப்பேட்டையில், அண்ணா படிப்பகத் திறப்புவிழா தோழர் லோகநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

படிப்பகத்தைத் திறந்துவைத்து தோழர் கோ. இளவரசு பேசுகையில் 'நாட்டில் இத்தகைய படிப்பகங்கள் எங்கும் அமைக்கப்படல் வேண்டும். ஓய்வு நேரங்களில் நேரத்தை வீணாக்காது நல்லமுறையில் பயன்படுத்தப் படிப்பகங்கள் பெரிதும் பயன்படுகின்றன. அதிலும் இந்தப் பகுதியில் உள்ளவர்கள் ஏழைகள்; எனவே, இலவசமாக நல்ல நூல்களையும் ஏடுகளையும் அவர்கள் படித்துப் பயன் பெறச் செய்வது நல்ல முயற்சியாகும்; இதை நான் பாராட்டுகிறேன். அண்ணாவின் பெயரால் நிறுவப்பட்டுள்ள இந்தப் படிப்பகத்தில் எந்தக் கட்சியினரும்வந்து படிக்கலாம்; இங்கு மாற்றுக்கட்சியினர் எழுதிய நூல்கள்கூட வைக்கப்பட வேண்டும்,' என்று கூறி படிப்பகத்தைத் திறந்து வைத்தார்.

அடுத்துத் தோழியர் அருண்மொழி பேசுகையில், 'படிப்பகத்தில் கணக்கற்ற நூல்கள் இருப்பதைவிடப் பயனுள்ள ஒரு சில நூல்கள் இருந்தாலேபோதும்' என்று கூறினார்.

தோழர் ஏ. கே. வில்வம் பேசுகையில், 'அண்ணாவின் பெயரால் நிறுவப்பட்டிருக்கும் இந்தப் படிப்பகத்தின் மூலம் நாட்டில் அண்ணா அவர்கள் எடுத்துரைத்த நல்ல கருத்துக்களை நடைமுறையில் பயனடையச் செய்வதற்குப் பாடுபட வேண்டும்' என்று கேட்டுக் கொண்டும் நிலைமைகளை விளக்கியும் பேசினார்.

அடுத்துத் தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்கள் பேசுகையில், இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்ற அன்று முதல் இன்றுவரையில் அண்ணா அவர்கள் சமுதாயத் துறையில் மற்றத் துறைகளிலும் மாபெரும் மறுமலர்ச்சியை உண்டாக்கியிருப்பதை எடுத்துக்கூறினார்.

தலைவர் முடிவுரையுடன் நன்றி நவிலலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

எக்கட்சியுடனும் கூட்டுச் சேரமாட்டார்களாம்!

நாகபுரி, செப். 15—

மற்ற அரசியல் கட்சிகளுடன் தேர்தலுக்காகக் கூட்டாகச் சேருவதை இந்திய சோஷலிஸ்டு கட்சி ஆதரிக்கவில்லை என்றும், எனவே யாருடனும் கூட்டாகச் சேராது என்றும், அக்கட்சியின் பொதுச் செயலாளர் பிபின் பால் தாஸ் அறிவித்துள்ளார்.

'ஆட்சிக்குத் தமிழ்; உறவிற்கு ஆங்கிலம்'

'கட்டாய இந்தி கூடாது' என்கிறார் ஆச்சாரியார்

சென்னை, செப். 17—

"மொழிப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்; போதனா மொழியும், தமிழாக இருக்க வேண்டும்; ஆனால், மத்திய சர்க்காருடன் தொடர்பு கொள்வதற்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்

"ஆங்கிலம் அகில உலக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. அகில உலக விவகாரங்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருப்பது அவசியம்,"

என்று, சென்னையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசுகையில் ஆச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

எந்த ஒரு தொழிலும் செய்யாமல் இருப்பவர்களை காங்கிரசில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும், அரசியல் ஒன்றையே வாழ்வின் வழிகாட்டியாக யாரும் கொள்ளக்கூடாது என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் பேசுகையில், 'நாட்டின் இப்போதைய அமைப்பில் தேர்தல் என்பது மிகவும் செலவு கொண்ட விவகாரமாக இருக்கிறது; ஓட்டுக்களை விலைக்கு வாங்க முடிந்தவர்கள்தான் வெற்றி பெறுகின்றனர்' என்றும் எடுத்துரைத்தார்.

தமிழர்களைக் காட்டிக் கொடுக்கும் வடவர்!

சிங்கப்பூரிலும் கைவரிசையைக் காட்டுகிறார்

சிங்கப்பூர் நகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தில் இதுவரையில், அங்கு குடியேறிய இந்தியர்களே பெரும்பாலும் பணியாற்றி வந்துள்ளனர்; இப்பொழுது பணியாற்றி வரும் பத்தாயிரம் பேர்களில் பெரும்பாலோர் இந்தியர்கள்.

பல வேலைநிறுத்தங்களுக்கு இந்தியத் தொழிலாளர்களே முக்கியக் காரணம் என்று ஒரு சில உறுப்பினர்கள் குறிப்பிடுவதைக் கொண்டு, 'இனி, குடியேறிய இந்தியர்களுக்கு வேலை கொடுக்கக் கூடாது' என்று நகரசபை முடிவு செய்திருக்கிறது.

இதன் விளைவாக அந்தப் பகுதியில் வாழும் இந்தியத் தொழிலாளர்கள் வாழ்க்கை பாதிக்கப்படும்.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் கல்கத்தாவைச் சேர்ந்த எஸ்.எச்.டி. ஈலியஸ் என்பவராகும்.

தெ. ஆ. வெள்ளையரின் நிறவெறி

கொடிய இன மண்டலச் சட்டம் துரிதமாக அமுலாகிறதாம்

ஜோகனஸ்பர்க், செப். 16—

தென் ஆப்பிரிக்காவில் இன மண்டலச் சட்டம் நடைமுறைக்கு துரிதமாகக் கொண்டுவரப்படுகிறது.

இந்தியர்கள் மோசமான இடங்களுக்கு அப்புறப்படுத்துகின்றனர்!

ரைபர்க் என்னும் நகரத்திற்கு இரண்டு மைல் தூரத்தில் உள்ள ஓர் இடத்திற்கு இந்தியர்களை அப்புறப்படுத்த முயற்சி நடைபெறுகிறது.

இந்த இடம், சாக்கடைப் பண்ணைக்கு அருகாமையில் இருக்கிறது என்றும், இதனால் 400 இந்தியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும், 4,11,000 பவுன் மதிப்புள்ள சொத்துக்கள் பாதிக்கப்படுமென்றும் வன்மையாகக் கண்டித்து, 'இந்தச் சட்டம் நியாயமற்றது நேர்மையற்றது' என்று இந்தியர்களின் சட்டப்பிரதிநிதி திட்டமாகக் கூறியுள்ளார்.

10கோடி டாலர் மதிப்புள்ள இயந்திரச் சாதனங்கள்

இந்தோனேஷியாவுக்கு ரஷ்யா உதவி

ஜாகர்த்தா, செப். 15—

10 கோடி டாலர் மதிப்புள்ள இயந்திரச் சாதனங்களையும் கருவிகளையும் இந்தோனேஷியாவிற்கு உதவியாக அளிப்பதற்கு ரஷ்யா முடிவு செய்திருக்கிறதாம்.

சினிமா படங்களுக்கு தடை

புதுடில்லி செப். 17—

ஆண் - பெண் உறவு பற்றிய கல்வியைப் போதிக்கும் சினிமாப் படங்களை மத்திய அரசாங்கம் தடை செய்ய முடிவுசெய்துள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட படங்களும் தடை செய்யப்படும் எனத் தெரிகிறது.

இம்மாதிரிப் படங்கள், மக்கள் உணர்ச்சியைத் தூண்டி கேடு விளைவிக்கின்றது என்பது அரசாங்கத்தின் நம்பிக்கையாகும்.

'மைசூரின் மாவட்டங்களை பிரித்து விடுவதா?'

விசுவேசுவரய்யா கண்டனம்

பெங்களூர், செப் 15—

கர்னாடகத்தின் 10 மாவட்டங்களையும் தனி வரலாறு படைத்துள்ள மைசூரிலிருந்து பிரித்துவிடுவது கூடாது என்றும், இதனால் ஒற்றுமை குலைந்துபோகும் என்றும் முன்னாள் மைசூர் திவான் விசுவேசுவரய்யா குறிப்பிட்டார்.

கழகச் செய்திகள்

வங்கனூர் தி. மு. கழக ஆண்டு விழா

7-9-56 மாலை 7 மணியளவில் தோழர் ச. கேசவன் தலைமையில், மேற்படி கழக முதலாவது ஆண்டு விழா நடைபெற்றது. தோழர்கள் என். ஏ. ரசித், கண்ணன், டி. ஆர். டி. அன்பழகன் ஆகியோர் சிறிது நேரம் பேசியபின்னர் தோழர் க அன்பழகன் அவர்கள் கழகம் தேர்தலில் ஈடுபடுவதன் அவசியத்தையும் பொதுமக்களின் கடமைகளையும் குறித்துப்பேசினர்.

தோழர் க அன்பழகன், மற்றும் சொற்பொழிவாளருக்கும் கழகச் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

திருத்துறைப் பூண்டியில் கழகப் பொதுக்கூட்டம்

7-9-56-ல் வாணக்காரத்தெருவில், தோழர் சிவாஜி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சந்தானம், வ மோகன், கலியாணசுந்தரம், கனகசுந்தரம், தருமலிங்கம் ஆகியோர் பேசியபின்னர் தோழர் ஈ வெ கி சம்பத் அவர்கள் நீண்டதொரு கருத்துரையாற்றினர்

வாளவாடியில் தி. மு. கழக பொதுக்கூட்டம்

10-9-56-ல் தோழர் வி. எம் சுந்தரராசன் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், விசைத்தறித் திணிப்பை எதிர்த்தும், வரும் பொதுத் தேர்தல் பற்றியும் தோழர்கள் வெ. காளியப்பன், பண்ணன், ப. நாராயணன், க. கிருட்டிணன் ஆகியோர் பேசினர்.

கீழப்பாவூர் தி. மு. கழகம்

12—9—56ல் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 19—9—56ல் திராவிட நாடு விடுதலை நாள் விழா கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

கோவில்பட்டி நகர தி.மு.க. பொதுஉறுப்பினர் கூட்டம்

9—9—56 பகல் 12-மணியளவில், கோவில்பட்டி நகர தி. மு. கழகப் பொதுஉறுப்பினர் கூட்டம் அ சு சி. பொ. அவர்கள் பணிமனையில், மாவட்டத் துணைச்செயலாளர் தோழர் டபிள்யு. டி துரைசாமி தலைமையில் நடைபெற்றது கீழ்க்கண்ட புதிய செயற்குழு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது செயலாளர் : அ. சு. சி. பொன்னுசாமி; துணைச்செயலாளர் : பி. வி. ரெங்கசாமி; பொருளாளர் : எஸ் எம். காசி; மாவட்டப் பிரதிநிதி : டபிள்யு டி. துரைசாமி. செயற்குழு உறுப்பினர்கள் : எஸ். கே. டி. சாமி, பா. முத்து, சே. முத்துசாமி, சந்தனப்பாண்டியன், கலைநேசன், ஏ. வெற்றிவேல், சி. முனியசாமி, ந. செயச்சந்திரன், வி. மாரியப்பன். கழக நலன்குறித்த இதர ஆலோசனைகளுக்குப் பின்னர் கூட்டம் இனிது முடிவுற்றது.

நாமனூர் தி. மு. கழகம்

10—9—56ல், மேற்படி கிளைக் கழகத் தேர்தல், தேர்தல் அதிகாரி து. உ. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. செயலாளர்: உல. கல்யாணசுந்தரம்; துணைச் செயலாளர்: வெ. சுந்தரராசன்; பொருளாளர்: சி அய்யாக்கண்ணு; மாவட்டப் பிரதிநிதி: உல வெள்ளத்துரை; செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள்: உல. கல்யாணசுந்தரம், வெ. சுந்தரராசன், சி. அய்யாக்கண்ணு, உல. வெள்ளத்துரை வே. முருகப்பன், மரு சிவப்பிரகாசம், குழ. இரத்தினம், ஆரு. முருகையா, சு. மு. இராமசாமி, வே. செல்லையா, மரு. திருப்பதி.

குமாரசாமிப்பட்டி தி. மு. கழகம்

10-9-56-ல் தோழர் ப. பெரியசாமி தலைமையில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் 23-9-56-ல் கழக ஆண்டு விழாவும் பிரிவினைநாளும் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திருப்புத்தூரில் கழகப் பொதுக்கூட்டம்

12—9—56 மாலை 6-மணியளவில், திருப்புத்தூர் தி. மு. கழகச் சார்பில் தோழர் காத்தமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் குருசாமி, இராமையா ஆகியோர் பேசியபின், தோழர் கி. மனோகரன் நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

பம்பாய்—மாதுங்கா தி. மு. கழகம்

21—8—56 காலை $10\frac{1}{2}$ மணிக்கு எண் 76 எ. இலாவியா கட்டிடத்தில் தோழர் தொ. து. அன்புச்செழியன் தலைமையில் மாதுங்கா கிளை தி. மு. க. தேர்தல் நடைபெற்றது. செயலாளர் : இ. எஸ். எஸ். பிச்சையா; துணைச்செயலாளர் : தே. சா. நாதன்; பொருளாளர் : பொன் திர. சபாபதி பொதுக்குழு உறுப்பினர்கள் : தொ. து. அன்புச்செழியன், ஜே. ஜோதிநாயகம். செயற்குழு உறுப்பினர்கள் : இலாசரஸ். அம்பிகாபதி, தர்மராஜ், செல்லை திருமலை, டி பி. மோகன். பின்னர் பல முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சிவகெங்கை நகர தி. மு. கழகம்

9—9—56 மாலை 4 மணியளவில் சிவகெங்கை நகர தி. மு. கழகச் செயற்குழுத் தேர்தல் கூட்டம் தேர்தல் அதிகாரி தோழர் அ. பொ. குருசாமி தலைமையில் பாண்டியன் நினைவுப் படிப்பகத்தில் நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர்: கு. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்: தி. சோமசுந்தரம்; பொருளாளர்: எஸ். பி. அப்துல்லா. மாவட்டப் பிரதிநிதி: அ வெங்கடசாமி; செயற்குழு உறுப்பினர்கள் :- மு. முத்துராமன், சிவப்பிரகாசம், இரா. கூலு, கோ. மணவாளன், நலங்கிள்ளி, மகாதேவன், எம். செல்வம், கனகசுந்தரம், தண்டியப்பன், சா. சுப்பையா, முஸ்தபா.

வேடசந்தூரில் கழகப் பொதுக்கூட்டம்

5—9—56 மாலை, வேடசந்தூர் தி. மு. கழகச் சார்பில், மாரியம்மன் கோவில் திடலில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கி மனோகரன், எ. சுப்பையா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

கம்பம் தி. மு. கழகம்

13—9—56 இரவு 11-மணிக்கு கம்பம 'காந்திமதி' நிலயத்தில் தோழர் கே. தங்கராசு தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகப் பொதுஉறுப்பினர் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர் : எம். பி. எம். மீரான்; துணைச்செயலாளர் : பி. அழகிரிசாமி; பொருளாளர் : எஸ். இரா. மச்சந்திரன் மாவட்டப் பிரதிநிதி : வெ. இராமசாமி செயற்குழு உறுப்பினர்கள் : கே. பி. திருவேங்கிடம், டி. நடராசன், எம் டீஸ்தான், பி. சாகுல்ஹமீது, எம் பொன்னையா, கே. கந்தசாமி, எம் பீர்முகம்மது, கே. பி. போசன், எஸ். சுருளியாண்டி.

உரத்தநாடு தி. மு. கழக பொதுக்கூட்டம்

உரத்தநாடு தி. மு. கழகச் சார்பில்தோழர் வையாபுரி தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில்தோழர் ப. நாராயணசாமி சிறிதுநேரம் பேசியபின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தேர்தலில் நாம் ஈடுபடுவது குறித்தும் என். ஜி. ஓ.-க்கள் பிரச்சினைகுறித்தும், விற்பனைவரிக் கொடுமை குறித்தும் பேசினர்.

பம்பாய்—தாராவி தி. மு. கழகம்

11—9—56 இரவு 8-மணியளவில் 'திராவிடரகத்'தில் நடைபெற்ற கிளைக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டத்தில், திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கூட்டத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், மற்றும் சில முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

தோட்டப்பாளையத்தில் கழகப் பொதுக்கூட்டம்

9—9—56 மாலை 6-30 மணிக்கு வேலூர் தோட்டப்பாளையம் தி மு. கழகக் கிளை சார்பில் தோழர் காத்தன் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் திராவிடமணி, இரா. புகழேந்தி, கருத்தோவியன் ஆகியோர் சிறிது நேரம் பேசின பின், தோழர் க. அன்பழகன், இன்றைய அரசியல், கழகம், பொதுத் தேர்தல் ஆகியவை குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

நாட்டரசன்கோட்டை தி. மு. கழகம்

13—9—56-ல், தோழர் து. உ. இராமநாதன் தலைமையில் கிளைக் கழகச் செயற்குழுத் தேர்தல் நடைபெற்றது செயலாளர் : கண. சுப. நாராயணன்; துணைச்செயலாளர் : அரு. கண்ணப்பன்; பொருளாளர் : வீர முத்து; மாவட்டப் பிரதிநிதி : சே. சங்கரசுப்பு செயற்குழு உறுப்பினர்கள் : கண சுப. நாராயணன், அரு. கண்ணப்பன், வீர. முத்து, சே. சங்கரசுப்பு, நா. சே. நாராயணன், சுப. தியாகராசன், ச. சுப்பையா, ச. கண்ணப்பன், இராம. இலக்குவன், ஆவி. கண்ணப்பன், வீர. குருசாமி, நீ. சாத்தப்பன், கண. காசி.

சிறுவலூரில் கழகப் பொதுக்கூட்டம்

9—9—56 மாலை 6 மணிக்கு, வெள்ளாங்கோவில் தி. மு. கழகச் சார்பில், சிறுவலூர் திரு. வி. க. திடலில் தோழர் பி.கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், தேர்தலில் ஈடுபடுவது குறித்தும், தோழர்கள் மு. முத்துரத்தினம், க. அன்பரசு, எ. எம். ஆர். நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இரவு $10\frac{1}{2}$ மணிக்குமேல், தோழர் வெங்கடாசலம் இல்லத்தில் கிளைக் கழக ஊழியர் கூட்டம் நடைபெற்றது. கழகத் தோழர்கள் கடமை பற்றி, மு. முத்துரத்தினம் நீண்டநேரம் பேசினர்.

திருமணங்கள்

திருச்சி மாவட்டம் கோணப்பாதைத் தோழர் எஸ். அப்பாவு—தோழியர் செல்லம் திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

மதுரைத் தோழர் பெ. செல்லையா — தோழியர் இல்சபதி அம்மை திருமணம் 9—9—56-ல் திருப்பரங்குன்றத்தில் நடந்தது. இது நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

நாமக்கல் தோழர் இரா. குழந்தைவேலு—தோழியர் பழனியம்மாள் திருமணம் 13—9—56ல் நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

14—9—56 காலை 10 மணிக்கு, குன்றத்தூர் அடுத்த மூன்றும் கட்டளையில் தோழர் சந்திரசேகரன்—தோழியர் கண்ணம்மாள் திருமணம் தோழர் எம். எம். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழியர் சத்தியவாணி-முத்து, தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு, வி. சி. தமிழ்தாசன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். இத்திருமண நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

சேலம் அக்கிச்செட்டிப்பாளையம் தோழர் முத்து — தோழியர் கைலம்மை திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

13—9—56 காலை 9 மணிக்கு, சென்னை—ஓட்டேரி வாழைமாநகர் எண் 12, இல்லத்தில் தோழர் கிருஷ்ணன்—தோழியர் எம். வி. சௌந்தரி திருமணம், தோழர் கே. எம் கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், தோழியர் சத்தியவாணி - முத்து, மா. இளஞ்செழியன், ஏ. கே. சாமி ஆகியோர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2-ம், தேர்தல் நிதிக்கு ரூ. 3-ம் தரப்பட்டது.

* * *

9—9—56 மாலை 5 மணிக்கு, சென்னை—சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரி தெருவிலுள்ள கா. அப்பாதுரை இல்லத்தில் தோழர் நடராசன்—தோழியர் ஆரோக்கியம் திருமணம் நடைபெற்றது. தோழியர் அலமேலு-அப்பாதுரை, மற்றும் இயக்கத் தோழர்கள் பலரும் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

9—9—56-ல், தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் தாம்பரம், பாரதமாதா தெரு, எண் 6 இல்லத்தில், தோழர் நம்பி—தோழியர் சக்குபாய் திருமணம் நடைபெற்றது. தோழர் ப. ஜீவானந்தம், தோழியர் அலமேலு-அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

18—9—56 காலை 8 மணியளவில், அரக்கோணம் கிரிபில் பேட்டை, எண் 1/11 இல்லத்தில், தோழர் எஸ் டி. சன்முகம்—தோழியர் புஷ்பா திருமணம் தோழர் வி. டி. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ப புகழேந்தி, கோ. வெற்றிவீரன், ஆ. இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

12—9—56 காலை 7 மணிக்கு, கடுமலை எஸ்டேட்டில் தோழர் கிருட்டினசாமி-தோழியர் பாப்பா திருமணம், தோழர் க. சண்முகம் முன்னிலையில் நடைபெற்றது. தோழர்கள் பெருமாள், முருகேசன், துரைசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழுக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

9—9—56 காலை 10-30 மணியளவில், கிளன்டேல் எஸ்டேட்டில் தோழர்—முத்து தோழியர் செல்லமணி திருமணம் தோழர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர் ஒளியழகன் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக, தி.மு.கழகத் தேர்தல் நிதிக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது.

இத்திருமணத்தின்போது தோழர் ஜோசப் அவர்களின் குழந்தைக்கு 'முத்து மாணிக்கம்' என்றும், தோழர் பவுல் என்பவரின் குழந்தைக்கு 'கண்மணி' என்றும் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாகத் தேர்தல் நிதிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

[நன்கொடை தொகைகள் யாவும் வரப்பெற்றோம்]—நன்றி—பொறுப்பாளர்.]

நெய்வேலி சுரங்கத்தை நிர்வகிக்க சர்க்கார் கம்பெனி அமையுமாம்

மத்திய உற்பத்தி மந்திரி தகவல்

நெய்வேலித் திட்டத்தை நிறைவேற்றவும் நிர்வகிக்கவுமாக, கம்பெனிகள் சட்டத்தின்கீழ், சர்க்கார் கம்பெனி ஒன்று நிறுவப்படும் என்று உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டி அறிவித்திருக்கிறார். ரூ 68 கோடி பெறுமான அந்தத்திட்டத்திற்கு ஏற்கனவே ரூ. 52 கோடிவரை இரண்டாம் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருப்பதாயும், திட்டம் நிறைவேறும் வகையைப்பொறுத்து மேலும் பணம் தேவையானால் ஒதுக்கப்படும் என்றும் அந்த மந்திரி பத்திரிகையாளரிடம் கூறினாராம்.

மேலும் இரு உர உற்பத்தித்தொழிற்சாலைகள்

இரண்டாம் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளபடி மூன்று உர உற்பத்தித் தொழிற்சாலைகள் போதுமானதல்ல என்றும், அதற்குமேலும் இரண்டு மூன்று உர உற்பத்தித் தொழிற்சாலைகள் நிறுவ வேண்டியிருக்கும் என்றும் அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

ஏஜெண்டுத் தோழர்களுக்கு:

ஏஜெண்டுத் தோழர்கள் இன்னும் பில் பாக்கித் தொகை செலுத்தாமல் இருக்கிறார்கள். இந்த அறிவிப்புக் கண்டதும் தோழர்கள் தங்கள் பாக்கித் தொகையினை அனுப்பாவிட்டால் இதழ்கள் அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

—நிர்வாகி : 'நம் நாடு'

எழுத்தறிவித்தல்—காதணி விழா

10—9—56 காலை 10 மணிக்கு, சென்னை, பிடாரியார்கோயில் சந்து, எண் 22 இல்லத்தில், தோழர் வி. சி தமிழ்தாசன் சகோதரர் தோழர் வி. சி. செயராமன் செல்விகள் மல்லி, கலா ஆகியோருக்குக் காதணி விழா, மகன் இரவிந்திரனுக்கு எழுத்தறிவித்தலும் நடைபெற்றது. தோழர்கள் ஏ. ஆர். சேஷாசலம், பி. வீரராகவன், எம். எஸ். முத்து, ஜி. இராசமன்னார் எம்.சி , கோ. செங்குட்டுவன், இளமாறன் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

அன்பளிப்பு

புஞ்சைப்புளியம்பட்டித் தோழர் மா. வு. வெற்றிவேல் அவர்கள், 'நம் நாடு' வளர்ச்சிக்கு அன்பளிப்பாகத் தந்த அணு 8 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

பிறப்பு

அத்தக்குடி தி மு. க. 1-வது வட்ட நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் ஏ. அய்யாசாமி அவர்களது துணைவியார் தோழியர் விக்டோரியா 11—9—56-ல், ஒரு பெண் மகவுக்குத் தாயானர். தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

‘தென்னாட்டிற்குப் பரிபூரண சுதந்திரம் இன்னும் கிட்டவில்லை’

‘காமராசர்கள், நக்கீரன் பரம்பரைக்கு இழுக்குத் தேடுபவர்கள்தானே?’

‘பதவி வெறி பிடித்தத் திறனற்றவர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா?’

ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., காஞ்சி-கல்யாணசுந்தரம் முழக்கம்

15—9—56-ல், சென்னை—சேத்துப்பட்டு, வ. உ. சி. இளைஞர் கழக எட்டாம் ஆண்டு விழாவில், தோழர்கள் ஏ கோவிந்தசாமி எம்.எல்.ஏ., காஞ்சி-கல்யாணசுந்தரம் ஆகியோர் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

ஏ. கோவிந்தசாமி
எம்.எல்.ஏ.

“இன்று காங்கிரசார் பெற்றுவிட்டதாகச் சொல்லுகிறார்களே அந்தச் சுதந்திரம், பரிபூரணமான சுதந்திரம் அல்ல; ‘வெள்ளையரிடமிருந்து வடநாட்டவரிடம் ஆட்சி வந்திருக்கிறது’ என்ற வகையில் வெறும் அதிகார மாற்றமே நிகழ்ந்திருக்கிறது.

“தென்னாட்டு மக்களுக்கு பரிபூரண சுதந்திரம் வேண்டுமென்பதற்காகத்தான் நாம் போராடி வருகிறோம். இன்று வ. உ. சி. போன்றவர்கள் உயிருடன் இருந்திருந்தால், சுதந்திரம் கிடைத்துவிட்டது என்று காங்கிரசார் கூறுவதை மறுத்து நம்மோடு சேர்ந்து, தென்னாட்டின் பரிபூரண சுதந்திரத்திற்காகப் போராடுவார்கள் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது.

“நம் தாயகத்திற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயரிடக்கூட மறுத்துவிட்ட காமராசர்கள்தான், நமக்கு ஏதோ சுதந்திரம் வந்துவிட்டது என்று பேசித்திரிகிறார்கள்.

“மராட்டியரையும் குசராத்தியரையும் பார்க்கும்போது, தமிழர்கள் இன்னும் ரோஷமுடையவர்களாக வேண்டும் என்றுதான் கூறவேண்டியிருக்கிறது. இந்த நிலையில் மக்கள் இருப்பதால்தான் ஆட்சியிலிருப்போர், ‘தமிழ் நாடு’ என்ற பெயர் வைக்கக் கூட மறுக்கிறார்கள்.

“சென்னை என்ற பெயர் மாநிலத்திற்குத் தொடர்ந்து நீடிப்பது, என்றுமே ஆபத்தானதாகும் என்று நாம் எச்சரிக்கிறோம். மீண்டும் மீண்டும், ‘தமிழ் நாடு’ என்று பெயரிட வேண்டுமென வற்புறுத்துகிறோம்.”

காஞ்சி-கல்யாணசுந்தரம்

“நமக்கெல்லாம் ஒரு சோதனை என்று கூறத்தக்க வரப்போகும் பொதுத் தேர்தல் நெருங்க நெருங்க, இந்த மாநில அமைச்சர்கள் செல்லுகிற இடமெல்லாம்—அது கல் நாட்டு விழாவாயினும் கட்டிடத் திறப்பு விழாவாயினும் நம்மைப் பற்றியே பேசி வருவதை நாம் காண்கிறோம்.

“தங்களுக்குப் பதவி வெறி என்பது கிஞ்சிற்றும் கிடையாது என்றும், எதிர்க்கட்சியினர்தான் பதவியைக் கைப்பற்றவேண்டும் என்று துடிப்பதாகவும் அந்த அமைச்சர்கள் பேசித் திரிகின்றனர்.

“அதேபோது, சில அமைச்சர்கள் இந்த நாட்டை ஆளுவதற்குத் தங்களைத் தவிர வேறு எவரும் தகுதியற்றவர்கள் என்றும் பேசி வருகின்றனர்.

“எதிர்க்கட்சியினர் பதவிக்கு வர ஆசைப்படுகின்றனர் என்றால் அதில் தவறு என்ன இருக்கிறது? ஆட்சிபீடம் என்ன, காமராசர்களது பரம்பரைச் சொத்தா? இல்லையே!

“எங்களுக்கு ஆளத் தெரியாது என்று கூறுகிறார்கள்; அந்தக் குறைக்குப் பொறுப்பாகவேண்டியவர் எவர்? கடந்த ஒன்பதாண்டுக் காலமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்திருக்கிறார்கள் காங்கிரசார்; ஆளுவதற்குத் தகுதியுடையவர்களாக அவர்கள் எங்களை ஆக்கவில்லை என்றால், அது அவர்களது குறைதானே தவிர, எங்களது குறையல்லவே!

“தவிர, எங்களுக்கு ஆளத் தெரியாது என்று இவர்கள் எப்படிக் கூறுகின்றனர்? எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு கூறுகின்றனர்?

“காங்கிரசார் — காமராசர் போன்றவர்கள், ‘எங்களுக்குப் பதவி வெறி இல்லை’ என்கிறார்களே, அது உண்மையா?

“கடந்த 1952ம் ஆண்டில் இந்த மாநிலத்தில் தேர்தலின்போது காங்கிரசாரைவிட எதிர்க் கட்சியினர்தான் அதிகமான எண்ணிக்கையினராக வெற்றி பெற்றிருந்தனர்; அப்போது, எப்படியாவது, ஆட்சிப் பொறுப்பைக் கைவிட்டு விடக்கூடாது என்ற கருத்தில்தானே, ஆச்சாரியாரை அழைத்து வந்து கொல்லைப்புறமாகச் சட்டசபைக்குள் நுழைத்து, பதவி ஏற்படுத்தினார்கள்? இதற்குப் பெயர், ‘முதல்தரமான அதிகார வெறி, பதவி வெறி’ என்பதைத் தவிர, வேறென்ன என்று அழைப்பது? இந்தச் செயல், எந்த அரசியல் ஒழுக்கத்திற்கும் ஜனநாயகத்திற்கும் கட்டுப்பட்டது என்பது, காங்கிரசாருக்குத்தான் வெளிச்சம்!

“இப்படி அதிகார வெறி பிடித்தவர்கள்தான் — தங்களைத் தவிர வேறெவரும் ஆட்சிக்கு வருவதையே விரும்பாத காமராசர்கள்தான் நம்மைப் பார்த்து, ‘பதவி வெறி பிடித்தவர்கள்’ என்று பேசுகிறார்கள்! வேடிக்கையாக இருக்கிறது!

“நமக்கு ஆளும் திறனில்லை என்று பேசுகிறார்களே, இவர்களது ஆளும் திறன் எப்படிப்பட்டது? கடந்த ஒன்பதாண்டுக் காலமாக ஆட்சிப் பொறுப்பிலிருந்து வருகிறார்கள்; ஏதேதோ திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருவதாகப் பெருமை பேசுகிறார்கள்; பலன் என்ன? நாட்டு மக்கள் அனுபவித்தவைதான் என்ன?

“உணவுத் துறையை எடுத்துக்கொண்டால், ‘உற்பத்தி எல்லையை மீறிவிட்டது; தேவைக்கும் அதிகமாகவே உற்பத்திசெய்கிறோம்’ என்று கூறினார்கள்; ஆனாலும், 10 அணா விற்ற அரிசி இப்போது 15 அணா, ஒரு ரூபாய் என்று ஏறிக்கிடக்கிறது. இன்னும் ஏறிக்கொண்டே இருக்கிறது! போதாக்குறைக்கு, ‘பலகோடி ரூபாய்பெறுமான உணவுத் தானியத்தை இறக்குமதி வேறு செய்யப்போகிறோம்’ என்கிறார்கள். இதுதான் உற்பத்தி அதிகரித்திருப்பதின் இலட்சணமா? இந்த இலட்சணத்திற்குக் காரணமான மந்திரிகள்தான் தங்களின் துர்நாற்றம் பிடித்த வாயால், தங்களுக்கு மட்டுமே ஆளத்தெரியும் எனப் பீத்தித் திரிகிறார்கள்.

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஆயிரக்கணக்கான விசைத்தறிகளைப் புகுத்துவது என்று டில்லி சர்க்கார் முடிவு செய்து விட்டார்கள்; இந்த மாநில சர்க்கார் ‘டபேதார்’களைப்போன்று கை கட்டி வாய் பொத்தி அந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியத்திலிருக்கிறார்கள். இரண்டாண்டுகளுக்குள் 6,000 விசைத் தறிகளைப் புகுத்துவது சென்னை சர்க்காரின் முடிவு என்று அண்மையில் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் மந்திரி பக்தவத்சலம் அறிவித்திருக்கிறார்.

“ஆனால் மந்திரி சுப்பிரமணியம் ஜெயங்கொண்டம் எனும் இடத்திற்குச் சென்று, அங்குள்ள நெசவாளர் தந்த வரவேற்பையும் பெற்றுக்கொண்டு, ‘கோடி கோடியாக டில்லி சர்க்கார் மானியம் வழங்கினாலும் விசைத்தறியைப் புகுத்த அனுமதிக்கமாட்டோம்,’ என்று பேசியிருக்கிறார் — நெசவாளருக்கு உறுதிமொழி வழங்குகிறார்!

“இது என்ன அரசியல் தர்மமோ தெரியவில்லை! சட்டசபையில், ‘விசைத்தறியைப் புகுத்தப்போகிறோம்’ என்று பேசிவிட்டு, மக்களிடத்தில் சென்று அதே மந்திரிசபையிலிருக்கும் வேறொருவர், ‘புகுத்தமாட்டோம்’ என்று பேசுகிறார்.

“இந்த விசைத்தறி விவகாரத்தில், இந்த மாநில சர்க்காரின் கொள்கைதான் என்ன? தெளிவாக்குவார்களா? இந்த இலட்சணம்தான், காங்கிரசாரின் ஆளும் திறன்போலும்!

“‘கல்கி’ இதழில் சென்ற வாரத்தில் ஒரு தலையங்கம் வந்தது; அதில், விசைத்தறி புகுத்துவதினால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை ஆராய்ந்துவிட்டு கடைசியாக, ‘தேர்தல் நெருங்குகிற இந்த நேரத்தில், விசைத்தறியைப் புகுத்தி நெசவாளரின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்வது இராஜதந்திரமாகாது’ என்று எழுதப்பட்டிருக்கிறது. ‘கல்கி’ இதழுடன் சமீபகாலமாக ஆச்சாரியார் நெருங்கியத் தொடர்புகொண்டிருக்கிறார் என்பதால், இந்தத் தலையங்கத்தை அவரே எழுதியிருக்கிறார் என்று கொண்டால் அது தவறுடையதல்ல! எப்படியிருந்தாலும், இது, கவனத்திற்குரியது.

“‘விசைத் தறியைப் புகுத்து; கைத் தறிகளை ஒழித்துக் கட்டு; நெசவாளரைப் பிச்சைக்காரர்களாக்கு; ஆனால், இதை எல்லாம், தேர்தல் நேரத்தில் செய்யாதீர்’ என்று ஒரு யோசனை கூறப்படுகிறது எப்படியிருக்கிறது பார்த்தீர்களா?

“தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி பவானியில் கூடியபோது, அங்கே காமராசரும் சுப்பிரமணியமும் பக்தவத்சலமும் இருந்திருக்கிறார்கள்; அங்கே, காங்கிரசார் விசைத்தறியைப் புகுத்துவதற்குத் தீவிரமான எதிர்ப்புக் காட்டியிருக்கிறார்கள். அவர்களிடத்தில், விசைத்தறியின் நன்மைகளைப் பற்றிப் பேசாமலிருந்துவிட்டு, சட்டசபையில் போய் பக்தவத்சலம் பேசியிருக்கிறார், அவை குறித்து! தமிழ்நாடு காங்கிரசின் தீர்மானத்தையும் கவனியாமல் 6,000 விசைத் தறிகளைப் புகுத்தப் போவதாக அவர் அறிவித்திருக்கிறார். இந்த விசித்திரமான போக்கை என்னென்பது?

“இவைகளை எல்லாம் எடுத்துச் சொன்னால், ‘அழித்துவிடுவோம்; ஒழித்து விடுவோம்,’ என்று ஏதேதோ பேசுகிறார்கள், ஆட்சியாளர்!

“ஆட்சியாளர்களது ‘தாம்’ என்ற மமதையைக் கண்டிக்கவும், அவர்களது ஆளும் திறனற்றப் போக்கினைக் கண்டிக்கவும், மக்களின் தேவைகளை அவர்களுக்கு உணர்த்தவும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் போட்டியிடுகிறது.

“ஜனநாயகத்தின் பாதுகாவலர்களே எதிர்க்கட்சியினர்தான்!

“இதை காமராசர் ஏதோ புதிதாகக் கண்டுபிடித்துவிட்டவர் போல, ‘எதிர்க்கட்சி தேவைதான்,’ என்று துவங்கிவிட்டு, ‘ஆனால், இவர்கள் எதிர்க் கட்சியாகக் கூடாது’ என்று பேசுகிறார்!

“எதிர்க் கட்சி என்றாலே— இவரது கருத்திலிருந்து—‘மாறுபட்டவர்’ என்பதுதானே பொருள்? அப்படியிருக்க, அந்த எதிர்க் கட்சியினர், காமராசர் விரும்புகிறபடி இருக்க வேண்டுமென்று எப்படிக் கூறலாம்? அப்படியிருந்தால் அது, எதிர்க் கட்சியே அல்லவே! ‘எதிர்க் கட்சி இப்படித்தான் இருக்கவேண்டும்’ என்று நிபந்தனை விதிப்பதற்கு இந்தக் காமராசர் யார்?

“ஆட்சியாளர்களது குறைகளை எடுத்துச் சொன்னால்—வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைத்த அநீதிகளை எடுத்துரைத்தால், ‘அரசியல் மூலதனம் தேடுவதற்காக இவற்றை எடுத்துச் சொல்கிறார்கள்’ என்று, காமராசர்கள் கூறுகிறார்கள்!

‘இவர்கள், ‘நாங்கள் கிராமங்களுக்கு வெளிச்சம் போட்டோம்; ஐந்தாண்டுத் திட்டம் தீட்டினோம்’ என்று பேசுவது, அரசியல் இலாபம் தேடுவதற்காக அல்லாது வேறு எதற்காக என்று நாம் கேட்கிறோம்.

“‘நக்கீரன் பரம்பரையினர் எனக் கூறிக் கொள்வோர், வடநாட்டு ஆதிக்கம் என்று கூறி ஏன் பயப்படவேண்டும்?’—என்று காமராசர் கேட்கிறாராம்!

“நக்கீரனுக்கிருந்த நேர்மை உள்ளமும் நெஞ்சு உரமும் பட்டுப் போகாததால்தான் அகில உலாமும் புகழுபவர் ‘எங்கள் நேரு’ என்று வர்ணிக்கப்படும் பெரிய மனிதர் இழைக்கிற அநீதிகளையும் தவறுகளையும்கூட நாங்கள் கண்டிக்கிறோம்—எதிர்க்கிறோம்! காமராசர் அந்தப் பரம்பரையில் வந்தவர் அல்ல என்பதை அவரது போக்கே எடுத்துக் காட்டுகிறதே! நக்கீரன் பரம்பரைக்கே இழுக்குத் தேடும் அவமானச் சின்னமாக அல்லவா அவர் காட்சிதருகிறார்?

“வ. உ. சி. போன்ற பெருந்தகைகளின் தியாகத்தைக் கூறிக்கொள்ளச் சிறிதும் அருகதை அற்றவர்கள்தானே, இன்று ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் காமராசர்களைப் போன்றவர்கள்? இந்த நிலையை மாற்றி, வ. உ. சி போன்ற நாட்டுப்பற்றுக்கொண்ட பெருந்தகைகள் கோரிய உண்மையான சுதந்திரத்தைத் தென்னாட்டிற்குப் பெற்றுத்தருவதுதான் தி. மு. கழகத்தின் இலட்சியமாகும்.”

திராவிட நாடு விடுதலை நாள் பொதுக்கூட்டங்கள்

★

கீழப்பாவூர் :

19—9—56 இரவு 8-மணிக்கு, பாண்டியன் மைதானத்தில், தோழர் ஜே. பி. மணி தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ஏ. இராமநாதன், பி. ஆறுமுகம், ப. புகழேந்தி ஆகியோர் பேசுவர்.

சமயநல்லூர் :

20—9—56 மாலை 7-மணியளவில், திருவள்ளுவர் திடலில், தோழர் பெ. தங்கச்சாமி தலைமையில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்.

பெரியகளாம்பாடி :

20—9—56 மாலை 6-மணிக்கு, பழைய தெரு, பிள்ளையார் கோவில் எதிரில், தோழர் சி. ரேணு தலைமையில் நடைபெறும்; தோழர்கள் ப. உ. சண்முகம், இராசன், வ. குமாரசாமி, தொ. கணேசன் ஆகியோர் பேசுவர்.

சென்னை - இராயபுரம் :

19-9-56 மாலை 6-30 மணிக்கு, சென்னை-இராயபுரம் பனைமரத் தொட்டியிலுள்ள சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் தோழர் சி. ஆர். அர்ச்சுனன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் மாறன், அன்பரசு, நீலமேகம், பன்னீர்செல்வம், இராசேந்திரன் ஆகியோர் பேசுவர்.

புஞ்சைத்தலையூர் :

20—9—56-ல், தோழர் கே. நைனு முகமது தலைமையில் நடைபெறும்; தோழியர் கோதை — பொன்னப்பா, தோழர் பி. கே. அலிபா ஆகியோர் பேசுவர்.

50,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஊதியத் தகராறு காரணமாம்

அன்சாலால், செப். 17—

ஊதியத் தகராறு காரணமாக ராணிகஞ்ச் பிரதேசத்தில் 30 நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் 50,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம்.

நிர்வாகி—தொழிலாளர்களுக்கிடையே ஓர் உடன்பாடு ஏற்படாதிறவரையில் இந்த வேலை நிறுத்தம் நீடிக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

நகரில் வாக்காளராக செப். 24 : கடைசி நாள்

வெளி: ...முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாரா